# அமைதி செயல்முறை மற்றும் அரசியலமைப்பு மாற்றம் ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுகள் அதனை அடைந்து மோதல் சூழமைவுகளை வெற்றி கொண்டு இலங்கையை நீடித்த அபிவிருத்தி நோக்கி வேகமாக முன்னகர்வதில் காணப்பட்ட தடைகள் பற்றி ஆய்வு பற்றிய செயற்றிட்டம் காலத்தின் தேவையாக அமைகின்றது. ஒரு நாட்டின் மோதல் முகாமைத்துவம் வெற்றி கொள்ளப்பட உபதேசியவாத உணர்வுகள் எப்போதுமே தடையாக அமைகின்றன. இதற்கான தீர்வுகள் முன்வைக்கபடாமல் இந்த மோதல் முகாமைத்துவ கூறுகள் வெற்றிகொள்ளப்படாத வரை சகல துறை அபிவிருத்திகளும் சாத்தியமற்ற ஒன்றாக அமைவதை வரலாற்றரசியலில் சரளமாக காண முடிகின்றது. ஒரு நாட்டின் நீடித்த அபிவிருத்தியிலும் நீடித்த சமாதானத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக அந்த நாட்டில் ஆழமாக வேரூன்றியிருக்கும் உபதேசியவாத சிந்தனைவாதத்தின் எழுச்சியையே கூற முடியும். அந்த வகையில் கடந்த பல நூற்றாண்டுகாலமாக இலங்கையில் வேரூன்றிய இந்த சிந்தனைவாதமே இலங்கையின் அமைதிக்கும் அதன் பொருளாதார சமூக அரசியல் கலாச்சார முன்னேற்றத்திற்கும் பெரும் சவாலை

ஏற்படுத்தியது. குறிப்பாக போரிற்கு பின்னரான நிலைமாறு காலமாகிய இக்காலத்தில் முன்வைக்கப்பட்டிருக்கும் இடைக்கால அறிக்கை வழி நடத்தல் குழு அறிக்கைகள் என்பன இலங்கையின் நீடித்த சமாதானத்தில் ஏதாவது மாற்றத்தை ஏற்படுத்துமா அதனூடாக அடையப்படும் முயலும் யாப்பு சீர்திருத்தம் மோதல் நிலைமாற்றத்தை ஏற்படுத்தும் அளவுக்கு பலம் மிக்கதாக அமையுமா நிகழ்கால சர்வதேச அரசியல் உள்ளூர் அரசியல் சூழமைவுகளுக்கு மத்தியில் அதனை அடைய முடியுமா போன்ற விடயங்களினை ஆய்வுக்குட்படுத்தி அதனூடான செயற்றிட்டமொன்றினை முன்வைப்பது பொருத்தமானது.

## அரசியல் யாப்பு வரைபு

தற்போது எமது நாட்டினை பொறுத்த வரையில் புதிய அரசியல் யாப்பு வரைபு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன சுய நிர்ணய உரிமை கோட்பாட்டின் வழியாக தேசிய ரீதியான அதிகாரங்களை பகிர்ந்து தேசிய இனப்பிரச்சனிஅகளுக்கு தீர்வினை முன்வைப்பதன் நாட்டின் மோதல் நிலைமைகளை சரி செய்து அபிவிருத்தியின் திசையில் நாட்டினை கட்டமைத்து கொள்ளுதல் அடிப்படை தேவையாகிறது. அதன் மூலமாகவே சிதைந்து போன பொருளாதார கட்டமைப்பை சீர்செய்தல் முக்கியமானது. மறுபக்கத்தில் ஜனநாயக உறுதிப்படுத்தல் முயற்சிகள், நிலைமாறு காலத்துக்கு ஏற்றவாறான நீதிப்பொறிமுறைகள் ஏற்படுதல் என்பன முழுமையாக முன்னெடுக்கப்படுதல் தேவையான ஒன்றாகும். அத்துடன் பாதிக்கப்பட்ட சமூகங்களின் உள்ளடக்கங்களை உணர்வுகளை அறிந்து அவைசீர் செய்ய வசதியானதாக யாப்பு உருவாக்க முயற்சிகள் அமைதல் மிக முக்கியமானதாக அமைகின்றது.

அத்துடன் அரசியல்  யாப்பு வரைபு உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்கள் முன்மொழிவுகள் என்பவற்றின் மீது தீவிர கவனம் செலுத்துவதோடு அதனை அமுல் செய்வதர்கான புறச்சூழலை உருவாக்குவது இனப்பிரச்சினைக்குரிய தீர்வுக்குரிய சாத்தியமான வழியாக அமைகின்றது.

## செயற்றிட்ட நோக்கம்

இலங்கையில் இதுவரை ஏற்பட்ட அரசியலமைப்பு மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்துள்ளன? , அவை எவ்வாறான தாக்கத்தை அனைத்து சமூக தரப்புகளிலும் ஏற்படுத்தியுள்ளன ? , இவற்றினால் நாட்டின் அமைதி செயற்பாடாது எவ்வாறான மாற்றங்களை சந்தித்துள்ளது எனும் விடயங்களை ஆவணப்படுத்தி இவை தொடர்பான அனைத்து தகவல்களையும் ஆய்வடிப்படையில் ஆவணப்படுத்தி உலகில் உள்ள அனைவருக்கும் இலவச அணுக்கத்தில் கிடைக்கச் செய்வதே இச் செயற்றிட்டத்தின் நோக்கமாகும்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் இலங்கையின் அரசியலமைப்பின் வரலாறு மற்றும் அதனோடு தொடர்புடைய அமைதி செயன்முறைகளின் மாற்றங்கள் என்பன ஆவணப்படுத்தப்படுவதோடு இத்துறையில் தேர்ச்சி மிக்க ஆளுமைகளது வாய்மொழி வரலாறுகள் என்பவையும் ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்.

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 5,476,332**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**